கேள்வி என்பதால் உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேள்விகளைக் கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 81, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

81—

தொழிற்சாலை

***268—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, குலசேகரம் பகுதியில் இரப்பர் தொழிற்சாலை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாக்கள்—விடைகள் நேரத்தில் பதிலளிப்பதற்கு எனக்கு அனுமதியளித்த எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உங்களுடைய அனுமதியோடு அம்மா அவர்களுக்கு இன்னொரு முறை நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் 2–9–2011 அன்று மக்களுக்குக் குறைந்த கட்டணத்திலே கேபிள் டி.வி.–யைத் தொடங்கி, வருமா, வராத என்ற கேள்விக்கு முற்றுப்புள்ளியை வைத்து, தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) செய்வதைச் சொல்வோம், (மேசையைத் தட்டும் ஒலி) சொன்னதைச் செய்வோம், அதையும் உடனே செய்வோம் என்று நிறைவேற்றி, ஒரு குடும்பம் கொள்ளையடித்ததற்கு முற்றுப்புள்ளி வைத்த (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தமிழக மக்களின் சார்பாகவும், குறிப்பாக அதிகம் பாதிக்கப்பட்ட கோவை மாவட்ட மக்களின் சார்பாகவும் நன்றியைக் கூறிக்கொண்டு எனது பதிலை அளிக்கிறேன்.

2011 செப்டம்பர் 5]

விடை—

(அ) மற்றும் (ஆ) பத்மநாபபுரம் தொகுதி, குலசேகரம் பகுதியில் இரப்பர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

இருப்பினும், தகுந்த தொழில் முனைவோர் பத்மநாபபுரம் தொகுதி, குலசேகரம் பகுதியில் இரப்பர் தொழிற்சாலை நிறுவுவதற்குத் தேவையான நிதி முதலீடுகளுடன் புதிய திட்டச் செயல் குறிப்புகளுடன் செயல்படுத்த முன்வந்தால் அவர்களுடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) இணைந்து திட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையினைப் பெற்று திட்டம் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் சாதாரண தொண்டராக இருந்துவந்த என்னை, முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினராக்கிய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், கழகத்தின் பொருளாளர் வணக்கத்திற்குரிய தளபதி அவர்களுக்கும், வாக்களித்த பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் நடைபெறும் முக்கிய தொழில் இரப்பர் விவசாயம் ஆகும். 19,355 எக்டேர் நிலத்தில் உலகத் தரம்வாய்ந்த இரப்பர் பயிரிடப்பட்டுள்ளது. இதில் 9,000 எக்டேர் நிலம் அரசு இரப்பர் கழகத்திற்குச் சொந்தமானது. குமரி மாவட்டத்தில் படித்த இளைஞர்கள் அதிகமாக உள்ள காரணத்தினால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் இரப்பர் தொழிற்சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், செண்பகராமன்புதூர் அருகில் சுமார் 115 ஏக்கர் பரப்பளவில் இரப்பர் தொழிற்பூங்கா ஒன்றை கூட்டுத் துறையில் அமைப்பதற்காக டிட்கோ நிறுவனம், தனியார் தொழில்

முனைவோர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அக்ஷா டெக்னாலஜி நிறுவனத்துடன் கடந்தகால அம்மா ஆட்சியிலே 2003–ல் ஒப்பந்தம் செய்தது.

முற்பகல் 10—45

இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு இரப்பர் பூங்கா என்ற கூட்டுத் துறை நிறுவனம் ஒன்று உருவாக்கப்பட்டது. இக்கூட்டுத் துறை நிறுவனம் இத்திட்டத்தை முறையாகச் செயல்படுத்த இரப்பர் சம்பந்தப்பட்ட தொழில்களுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலமாக மாற்றியமைக்க மத்திய அரசின் சிறப்புப் பொருளாதார மண்டல ஒப்புதல் குழுமம் கடந்த 2006, ஜனவரி 17–ல் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்தது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்குப் பின் வந்த தி.மு.க. அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான முயற்சிகளைத் தொடர்ந்து எடுக்கத் தவறியதால், 100 ஹெக்டேர் நிலங்களை ஒதுக்கீடு செய்யாமல் இக்கூட்டுத் துறை நிறுவனத்தின்மூலம் செய்த ஒப்பந்தத்தை தி.மு.க. அரசு இரத்துச் செய்தது. பத்பநாபபுரம் தொகுதி, குலசேகரம் பகுதியில் இரப்பர் தொழிற்சாலை நிறுவுவதற்குத் தகுந்த தொழில் முனைவோர் முன்வந்தால் அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, டிட்கோ இணைந்து திட்டச் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இரப்பர் பூங்கா அமைப்பதற்கு 200 ஏக்கர் நிலம் செண்பகராமன்புதூரில் தி.மு.க. ஆட்சியில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதில் இரப்பர் பூங்கா அமைத்துத் தருவதற்கோ அல்லது குலசேகரம் சமீபம், பெருஞ்சாணியில் அரசு இரப்பர் கழகத்திற்குச் சொந்தமான இடம் இருக்கிற காரணத்தினால் அந்த இடத்தில் இரப்பர் தொழிற்சாலை அமைத்துத் தருவதற்கோ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

2011 செப்டம்பர் 5]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. அரசு என்ன செய்தது என்று நான் விளக்கமாகப் பதில் அளித்தேன். தகுந்த தொழில் முனைவோர்கள் வந்தால் அம்மா அவர்களின் அரசைப் பொறுத்தவரையில் எல்லா வசதிகளும் செய்து கொடுக்கத் தயாராக உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

82—

பேருந்து வசதி

***52—திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறிச்சி நகராட்சி, மாச்சம்பாளையத்திலிருந்து அரசு மேல்நிலைப் பள்ளிக்குப் பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளி, மாச்சம்பாளையம் பிரிவிலிருந்து சுமார் 0.8 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. மாச்சம்பாளையம் பிரிவிலிருந்து அரசு உயர்நிலைப் பள்ளிவரை செல்லும் 0.8 கி.மீ. நீளமுள்ள இச்சாலை பேருந்து இயக்கிட உகந்ததாக இல்லை. இது 12–டி கான்கிரீட் சாலையாக, மிகவும் குறுகலாகவும், எதிரே வரும் வாகனங்களுக்கு வழிவிட இயலாத அளவிலும் அமைந்துள்ளது. மேலும் மாச்சம்பாளையம் பிரிவு வழியாக 3 அரசுப் பேருந்துகள் தினசரி 24 நடைகளும், ஒரு தனியார் பேருந்து தினசரி 24 நடைகளும் இயங்கி வருகின்றன. தற்போது இப்பேருந்துகளின்மூலம் மாணவ, மாணவியர் பயன் பெற்று வருகின்றனர். இச்சாலை அகலப்படுத்தப்பட்டு, பேருந்து செல்வதற்கு ஏதுவாக அமைக்கப்பட்ட பின் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று பேருந்து இயக்கிட ஆவன செய்யப்படும்.